# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்குமாகாணம்

# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| தரம் :- 10<br>Grade 10 | வணிகக்கல்வியும் கணக்கீடும் I<br>Business studies & Accounting I | நேரம் :-<br>1 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:.............................. | 60 \| T \| I | |

**கவனிக்க:**

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1. வணிகமொன்றின் பிரதான ( பொது) நோக்கமாக அமைவது
   1) தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தல்
   2) நுகர்வோரது தேவை விருப்பங்களை பூர்த்தி செய்தல்
   3) பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தல்
   4) ஊழியர் நலன் பேணல்

2. தேவைகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியாக அமைவது
   1) உணவு, பாடசாலை, உறைவிடம்
   2) சுகாதாரம், உறைவிடம், இணையம்
   3) தொடர்பாடல், உணவு, உறைவிடம்
   4) உணவு, உறைவிடம், சீருடை

3. ‘X’ நிரலானது மனித விருப்பங்களையும், ‘Y’ நிரலானது மனித தேவைகளையும் கொண்டுள்ளது.

| X | Y |
|---|---|
| CCTV கமெரா<br>டெங்கு ஒழிப்பு<br>இணையவழிக் கற்கை<br>கைத்தொலைபேசி | A. சுகாதாரம்<br>B. பாதுகாப்பு<br>C. தொடர்பாடல்<br>D. கல்வி |

X நிரலில் காட்டப்படும் விருப்பங்களுக்குப் பொருத்தமான Y நிரலில் காணப்படும் தேவைகளை இணைக்கும்போது சரியாக அமையும் விடையாக அமைவது

1) A B C D  2) B A D C  3) C A B D  4) B A C D

4. பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரின் பணியானது ……………..1………………… ஆகக் காணப்படும் அதேவேளை அவரால் பயன்படுத்தப்படும் ஸ்மார்ட் போர்ட் (smartboard) ………2……………… ஆகக் கருதப்படும். 1, 2 ஆகிய இடைவெளிகளில் இடக்கூடிய சரியான சொற்களாக அமைவது,
   1) சேவை, பொருள்
   2) தேவை, விருப்பம்
   3) பொருள், சேவை
   4) தேவை, பொருள்

5. நிலம் என்னும் உற்பத்திக்காரணியைக் குறிக்கும் விடைத்தொகுதியாக அமைவது
   1) காட்டு வளம், மண்
   2) காட்டுவளம், பட்டை தீட்டப்பட்ட வைரம்
   3) மண், கட்டடம்
   4) கனியவளம், காசு

6. அக்கறை செலுத்தும் நபர்களில் ஒருவராக வழங்குனரின் நோக்கமாக அமைவது
   1) போதியளவிலான இலாபத்தை உழைத்தல்
   2) உற்பத்திப் பொருட்களது விலைகளைத் தீர்மானித்தல்
   3) முகாமைத் தீர்மானங்களை எடுத்தல்
   4) தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெறல்

7. புறச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியாக அமைவது
   1) வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், போட்டியாளர்கள்
   2) உரிமையாளர், ஊழியர்கள், முகாமையாளர்
   3) உரிமையாளர், ஊழியர்கள், போட்டியாளர்கள்
   4) வாடிக்கையாளர்கள், வழங்குநர், போட்டியாளர்கள்

8. வணிகமொன்றிற்கு புதிய தொழில்நுட்ப முறைகளுக்கு இயைபாக்கமடைவதில் சிரமங்கள் காணப்படுகின்றதெனின் அது வணிகமொன்றிற்கு
   1) பலமாகும். 2) பலவீனமாகும். 3) வாய்ப்பாகும். 4) அச்சுறுத்தலாகும்.

9. கீழே வணிகமொன்றின் வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.
   A. நுகர்வோரின் வாழ்க்கைப்பாங்கு மாற்றமடைதல்
   B. அதிவேக வீதிகளை அமைத்தல்
   C. முகாமையாளர்களின் அனுபவங்கள்
   D. வணிகத்திற்கு வரிச் சலுகை வழங்குதல்
   E. ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு இலட்சினை காணப்படல்

   மேற் குறிப்பிட்ட விடயங்களில் வாய்ப்புக்களை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியாக அமைவது
   1. A , B 2. A, C , E 3. A, B , D 4. C, D , E

10. கீழே X நிரலில் பொருளாதாரச் சூழல் காரணிகளும், Y நிரலில் அக்காரணிகளுக்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. வட்டிவீதங்கள் | A. நாடொன்றின் தேசிய வருமானம் அந்நாட்டு மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட முறை |
| 2. சேமிப்பு | B. பொருட்கள் சேவைகளது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் |
| 3. பணவீக்கம் | C. வங்கியால் வாடிக்கையாளனது வைப்பிற்கு வழங்கப்படுவதும், கடனுக்கு அறவிடப்படுவதும் |
| A. வருமானப்பரம்பல் | D. தனிநபர்கள் வருமானத்திலிருந்து நுகர்விற்காக செலவிடப்படாது வைத்திருக்கும் பகுதி |

X நிரலுக்கு பொருத்தமாக Y நிரலை இணைக்கும்போது சரியாக அமையும் விடைத்தொகுதி

1) C, B, D, A 2) C, A, D, B 3) D, A, C, B 4) C, D, B, A

11. பின்வருவனவற்றுள் உள்நாட்டு வணிகத்தில் ஏற்படும் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகளாவன,

1) பயிற்சிபெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்படுதல்.
2) உள்நாட்டுக் கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல்.
3) நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளமுடிதல்.
4) அதிக போட்டித்தன்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.

12. பங்குடைமை வணிகமொன்றின் பங்காளர் உச்ச எண்ணிக்கை 20 என வரையறுக்கும் சட்டம்
1) 1890 ஆம் ஆண்டு பங்குடைமைச் சட்டம்
2) 1840 ஆம் ஆண்டு 7 ம் இலக்க மோசடி தவிர்ப்புச் சட்டம்
3) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வணிகப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டம்
4) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 13, 14, 15 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.
A. வரையறுக்கப்படாத பொறுப்பு
B. ஒப்பந்தம் ஒன்று காணப்படல்
C. சட்ட ஆளுமை காணப்படல்
D. ஜனநாயக நிர்வாகம்
E. அங்கத்தவர் நலன் பேணல்
F. பதிவு செய்வது அவசியமில்லை

13. தனியுரிமை வணிகமொன்றின் பண்புகளாக அமையும் எழுத்துக்களை குறித்து நிற்பது
1) A , B 2) B , D 3) A, F 4) C , E

14. தனியுரிமை வணிகம், பங்குடைமை வணிகம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான பண்புகளாகக் காணப்படுவது,
1) A , B 2) B , D 3) A, F 4) C , E

15. கூட்டுறவு அமைப்பொன்றின் பண்புகளாக அமைவது
1) A, B, C 2) B, C, D 3) C, D, E 4) D, E, F

16. இலாப நோக்குள்ள வணிகமொன்றாகக் கருதப்படுவது
1) அரச கம்பனிகள 2) கூட்டுறவு வணிகம்
3) அரச திணைக்களங்கள் 4) சங்கங்கள், கழகங்கள்

17. சிவகரன் தனது வணிகத்தை ‘கரன் களஞ்சியம்’ என்னும் பெயரில் பதிவு செய்துள்ளார். அவர் வணிகத்தின் பெயரைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மையொன்றாகக் கருத முடியாதது
1) சட்ட ஆளுமை கிடைக்கும்
2) அடையாளமொன்று கிடைத்தல்
3) அரச உதவிகளைப் பெற முடிதல்
4) நிதி நிறுவனங்களில் கடன் பெறுவது இலகுவாகும்.

18. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று அதன் பங்குதாரரிடமிருந்து தனித்துவமான வணிகமாக கருதப்படவேண்டுமெனின்,
1) நிர்வாகத்தை இயக்குனர் குழு மேற்கொள்ள வேண்டும்
2) வணிகத்தின் பெயரைப் பதிவு செய்தல் வேண்டும்.
3) பங்குகளை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்.
4) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படல் வேண்டும்.

19. தனியுரிமை வணிகமொன்றில் காணமுடியாத பண்பாக அமைவது
1) தொடர்ந்து இயங்கும் தன்மை இல்லை
2) சட்ட ஆளுமை காணப்படல்
3) தனியொருவரால் மூலதனமிடப்படல்
4) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாதது

20. வணிக உலகில் உற்பத்தி செய்யப்படும் சில பொருட்கள், சேவைகள் மிக விரைவாக காலவதியாகும் நிலைக்கு உட்படுவதற்கு காரணமாக அமையும் சூழலாக அமைவது,
    1) பொருளாதாரச் சூழல்
    2) பூகோளச் சூழல்
    3) சட்டச் சூழல்
    4) தொழினுட்பச் சூழல்

21. கணக்கீட்டின் பிரதான நோக்கமாகக் கருதப்படக்கூடியது,
    1) வணிகத்தின் நிதி நிலைமையை அறிவதற்கு
    2) சட்டத் தேவைப்பாடுகளை நிறைவேற்றல்
    3) அக்கறை கொண்ட தரப்பினருக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்க
    4) இலாபத்தை சரியாகக் கணக்கிடுவதற்கு

22. வணிகமொன்றில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்படுகின்றன இவற்றில் கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க,
    1) ரூ 3000 கடன் வருமதியொன்று அறவிடமுடியாக் கடனாக காணப்படல்
    2) மாதாந்த வாடகைக் கொடுப்பனவு ரூ 15 000
    3) முகாமை சாரா ஊழியர் எண்ணிக்கை 2 ஆகும்
    4) ரூ 20 000 பெறுமதியான பொருட் தொகுதியொன்று அழிவுறுதல்

23. கணக்கீட்டுச் சமன்பாட்டின் சரியான வடிவத்தைக் காட்டுவது
    1) சொத்துக்கள் = உரிமை – பொறுப்புக்கள்
    2) உரிமை = சொத்துக்கள் + பொறுப்புக்கள்
    3) சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்
    4) சொத்துக்கள் = பொறுப்புக்கள் - உரிமை

24. பின்வருவனவற்றுள் நடைமுறைப் பொறுப்பினை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
    1) கடன்கொடுத்தோர், அட்டுறுச்செலவுகள்
    2) கடன்பட்டோர், காசுமீதி
    3) காணிகட்டிடம், இயந்திரம்
    4) வங்கிக்கடன், வங்கிமேலதிகப் பற்று

25. வருமானக் கணக்குகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியைத் தெரிவு செய்க
    (1) மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு
    (2) வங்கிக் கடன் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
    (3) கடன்பட்டோர் கணக்கு, காசுக் கணக்கு
    (4) விற்பனைக் கணக்கு, பெற்ற கழிவுக் கணக்கு

26. வணிகமொன்றின் வெளியகத்தரப்பினரால் ஈடுபடுத்தப்படுவதைக் குறிப்பது,
    1) உரிமை
    2) பொறுப்பு
    3) வருமானம்
    4) சொத்துக்கள்

27. உரிமையிலும் , சொத்திலும் அதிகரிப்பைக் காட்டும் கொடுக்கல் வாங்கலாக அமைவது
    (1) ஊழியர்க்கு சம்பளம் செலுத்தியது ரூபா 10 000
    (2) உரிமையாளரால் மேலதிக மூலதனமாக ரூபா 100 000 இடப்பட்டது.
    (3) உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக ரூபா 10 000 பற்றியுள்ளார்.
    (4) வங்கிக் கடனாக ரூபா 200 000 பெறப்பட்டது.

28. நடைமுறை அல்லாச் சொத்தொன்றாகக் கருதப்படக் கூடியது
    1) வங்கிக் கடன்
    2) இருப்பு
    3) தளபாடங்கள்
    4) கடன்பட்டோர்

29. பின்வருவனவற்றுள் நடைமுறைச் சொத்துக்களை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
    1) காசு, தளபாடங்கள், கடன்பட்டோர், இருப்புக்கள்
    2) காணி கட்டடங்கள், தளபாடங்கள், மோட்டார் வாகனங்கள்,முதலீடுகள்
    3) காணிகட்டடங்கள், கடன்பட்டோர், இருப்புக்கள், வங்கி மீதி
    4) காசு, கடன்பட்டோர், இருப்புக்கள், வருமதி வருமானங்கள்

30. பொறுப்பொன்று குறையும் அதேவேளை, காசுச் சொத்து குறையும் இரட்டை விளைவினைக் காட்டும் சரியான கொடுக்கல் வாங்கலொன்றைத் தெரிவு செய்க.
    (1) ஊழியருக்கு சம்பளம் வழங்குதல்
    (2) வங்கிக் கடனை மீளச் செலுத்துதல்
    (3) வங்கியிலிருந்து கடன் பெறல்
    (4) கடனுக்கு விற்பனை செய்தல்

31. ‘ரூபா 5000 காசு கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டது’ இக்கொடுக்கல் வாங்கலுக்குரிய இரட்டை விளைவாக அமைவது
   1) கடன்பட்டோர் சொத்து அதிகரிக்கும், காசு சொத்து குறையும்
   2) கடன்பட்டோர் சொத்து குறையும், காசு சொத்து அதிகரிக்கும்
   3) கடன்பட்டோர் கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு
   4) காசுக்கணக்கு வரவு, கடன்பட்டோர் கணக்கு செலவு

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 32, 33, 34 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.

A. காசுக் கணக்கு
B. வாடகை வருமானக் கணக்கு
C. மூலதனக் கணக்கு
D. கடன்பட்டோர் கணக்கு
E. கடன்கொடுத்தோர் கணக்கு
F. வங்கிக் கடன் கணக்கு
G. இயந்திரக் கணக்கு
H. பற்றுக் கணக்கு

32. மேற்குறிப்பிட்டவற்றுள் சொத்துக் கணக்குகளாக மட்டும் கருதக் கூடியது
   1) A, C, D   2) A, B, C, G   3) A, D, E   4) A, D, G

33. உரிமைக் கணக்குகளாக மட்டும் கருதக் கூடியது
   1) C , H மட்டும்   2) A மட்டும்   3) A, C மட்டும்   4) A, C, H மட்டும்

34. ‘ F ‘ என்ற எழுத்து குறித்து நிற்கும் கணக்கு வகையாக அமைவது
   1) சொத்துக் கணக்ககள்   2) உரிமைக் கணக்குகள்
   3) பொறுப்புக் கணக்குகள்   4) வருமானக் கணக்குகள்

35. பின்வரும் எக் கொடுக்கல் வாங்கல் சொத்து, உரிமை, பொறுப்பு என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?
   1) உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக ரூபா 5000 காசாகப் பற்றுதல்
   2) கடன்கொடுத்தோருக்கு ரூபா 15 000 செலுத்தப்பட்டது.
   3) ரூபா 6000 வங்கிக்கடன் வட்டி உள்ளடங்கலாக வங்கிக்கடன் தவணைக் கட்டணம் செலுத்தியது.
   4) ரூபா 5 000 காசு கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டது.

36. கணக்கியலில் மூலஏடாகவும், பேரேடாகவும் செயற்படும் ஓர் ஏடு?
   1) கொள்வனவு நாளேடு   2) விற்பனை நாளேடு
   3) பொதுநாட்குறிப்பேடு   4) காசேடு

37. காசுக் கொடுப்பனவிற்கான மூல ஆவணமாக அமைவது,
   1) பட்டியல்   2) கொடுப்பனவுக் கைச்சாத்து   3) பற்றுச்சீட்டு   4) வைப்புச்சீட்டு

38. கடன் கொடுப்பனவு செய்யும் காலத்தினுள் கடன்பட்டோரால் கடன்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டால் கடனில் இருந்து குறைத்து வழங்கும் கழிவினைக் குறிப்பது,
   1) கொடுத்த கழிவு   2) பெற்ற கழிவு   3)காசுக் கழிவு   4) வியாபாரக் கழிவு

39. சில்லறைக் காசேட்டின் மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவானது முறையே,
   (1) காசேடு – வரவு, சில்லறை காசேடு செலவு
   (2) உரிய செலவுக் கணக்கு வரவு, சில்லறை காசேடு செலவு
   (3) சில்லறை காசேடு வரவு, காசேடு செலவு
   (4) சில்லறை காசேடு வரவு, உரிய செலவுக் கணக்கு செலவு

40. வங்கியில் பணத்தை வைப்பிலிட்டமைக்கான கணக்கு பதிவுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தும் மூலஆவணமாக அமைவது,
   (1) பற்றுச்சீட்டு   (2) கைச்சாத்து   (3) பட்டியல்   (4) வைப்புச் சீட்டு

(1×40= 40 புள்ளிகள்)